வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 253 of 2024

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வேணுகோபால் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியம் | வயது | : | |
| கிராமம் | : | சுக்கம்பாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.01.2026.

(2 ஆம்எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 21.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ரியல் எஸ்டேம் பிஸ்னஸ் செய்து வருகிறேன். நானும் ராஜேந்திரன், மருந்தாசலம் ஆகிய மூலவரும் கூட்டாக சேர்ந்து பல்லடம் - பூமலூர் ரோட்டில் தேவி காம்பவுண்டில் மொத்தமாக 5 கடைகளை வாடகைக்கு எடுத்து அதில் இரண்டு அரிசி கடை மற்றும் ரியல் எஸ்டேட் அலுவலகம் வைத்தும் சம்பவத்திற்கு முன் ஒரு வருட காலமாக நடத்தி வருகிறோம். கருடா ரியல் எஸ்டேட் என்ற பெயரில் அலுவலகம் நடத்தி வருகிறோம். கடையை காலை 6.00 மணிக்கு திறந்து இரவு 10.00 மணிக்கு பூட்டி செல்வோம். கடந்த 26.06.2023 ஆம்தேதி வழக்கம் இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டோம். மறுநாள் 27.06.2023 ஆம்தேதி காலை 6.00 மணிக்கு எனது பார்ட்னர் ராஜேந்திரன் கடையை திறக்க வந்து பார்த்தபோது கடையின் ஸ்ட்டர் பூட்டை அறுத்து சிறிதளவு திறந்த நிலையில் இருந்ததை பார்த்து எங்களுக்கு தகவல் சொன்னார்.

2) பின்னர் நாங்கள் மூவரும் உள்ளே சென்று பார்த்தபோது எங்கள் அலுவலகத்தின்

நடுவில் உள்ள எனது மர மேஜையில் நான் வைத்திருந்த ரூ.42,000/- த்தை காணவில்லை எங்கள் பார்ட்னர் ராஜேந்திரன் வைத்திருந்த ரூ.7,000/-த்தை காணவில்லை . எங்கள் அலுவலகத்தில் வைத்திருந்த டாக்குமென்டை காணவில்லை. அலுவலகத்தின் எதிரில் கிடந்தது. இது சம்மந்தமாக காலை 11.30 மணியளவில் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். காணாமல் போயிருந்த எனது பணத்தில் ரூபாய் மூவாயிரம் மட்டும் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டேன். அந்த பணம் ரூ.3,000/- (6x 500)**அ.சா.பொ.1** ஆகும். காணாமல் போன மீதி பணத்தை எதிரி செலவு செய்து விட்டதாக போலீசார் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ஆம்எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) அரிசி கடை மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனம் மற்றும் அருண் ஐஸ்கீரிம் கடை யாருடைய பெயரில் இருந்தது என்றால் வேணுகோபால்,மருதச்சலம் மற்றும் ராஜேந்திரன் சேர்ந்து நடத்தப்பட்டு வருகிறது . அதற்கான ஆவணங்கள் எதவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். இதை தவிற வேறு தொழில் செய்து வருகிறோம் என்றால் இல்லை. 26.06.2023 அன்று இரவு யார் யார் கடையை பூட்டிவிட்டு சென்றோம் என்றால் நானும் , ராஜேந்திரன் இருவரும் பூட்டி சென்றோம். எத்தனை மணியளவில் பூட்டினோம் என்றால் 10.00 மணியளவில் பூட்டினோம் பூட்டிவிட்டு ஒரு 10.10 மணியளவில சென்றுவிட்டோம். கடையில் எத்தனை ஊழியர்கள் இருந்தார்கள் என்றா்ல் பணியாளர்கள் ஒருவரும் இல்லை. திருட்டுபோனதாக சொல்லப்படும் சமயத்தில் கடையில்கேமரா இல்லை என்றால் சரிதான்.

2)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடையில் அருகாமையில் கேமரா இருந்ததா என்றால் இருந்தது அதை போலீசார் செய்தனர். திருட்டு போன தகவல் எனக்கு எத்தனை

மணிக்கு கிடைத்தது என்றால் 6.30 மணிக்கு . நான் வந்த பார்த்தப்போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ராஜேந்திரன் மட்டும் இருந்தார். போலீசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் நேராக சொன்றுவிட்டேன் போலீசாருக்கு தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. யார் யார் காவல் நிலையம் சென்றோம் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். புகார் யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன்.

3) புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காவல் நிலையத்தில்வைத்து எழுதினேன். புகாரை எப்படி எப்படி எழுத வேண்டும் என்று போலீசார் சொன்னார்கள் என்றால் சம்பவத்தின் போது என்ன பார்த்தீர்களோ அதை எழுத சொன்னார்கள். எத்தனை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் நான் சம்பவ இடத்திற்கு செல்லததால் எனக்கு தெரியவில்லை. புகார் கொடுக்கும் போது போலீசார் விசாரித்த பிறகு தற்போது தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான்.. அதற்கிடையில் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில்போலீசார் கைரேகை எடுத்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரூ.42,000 தொகை எனக்கு எப்படி வந்தது என்பதற்கான ஆவணங்களை போலீசார் கேட்டார்களா நான் ஒப்படைதேனா என்றால் இல்லை. ரூ.42,000 தொகை சுமார் எத்தனை தாள்கள் என்று நான் புகாரில்குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் 500 ரூபாய் தாள்கள் இருந்தது. ரூ.7,000 தொகை சுமார் எத்தனை தாள்கள் என்று நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் ரூ.3,500 நாணயங்கள் இருந்தது மற்றும் ரூ.3,500 தொகை தாள்களாக இருந்தது. அந்த இரண்டு தொகைகளையும் ஒன்றாக வைத்திருந்தேனா அல்லது தனியாக வைத்திருந்தேனா என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) சட்டருக்கு அடுத்தாக கண்ணாடி கேபின் உள்ளது என்றால் சரிதான். அந்த

கண்ணாடி கேபின் உடைக்கப்பட்டிருந்தா என்பதை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆவணம் எதிர் திசையில் கிடந்தது என்பதை நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அடுத்த நாள் தான் கிடைத்தால் காவல் நிலையத்தில் தெறிவிக்கவில்லை. சாலை போக்குவரத்து மிகுந்த பகுதி என்றால் சரிதான். மேற்படி தொகை எதற்காக வைத்திருந்தேன் என்றால் கட்டிட வேலை செய்வதற்காக வைத்திருந்தேன். டேபின் ட்ராவில் தொகைவைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். டேபிள் ட்ரா பூட்டப்பட்டிருந்ததா அல்லது பூட்டு உடைக்கப்பட்டிருந்ததா என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு கடை மட்டும் தான் உடைக்கப்பட்டிருந்தா அல்லது மற்ற கடைகள் உடைக்கப்பட்டிருந்ததா என்றால் மற்ற கடைகள் உடைக்கப்படவில்லை.

5) கிடைக்கப்பெற்ற தொகை ரூ.3,000/- என்னுடையதா என்று உறுதியாக கூறமுடியவில்லை என்றால் என்னிடம் திருடப்பட்ட நோட்டில் உள்ள எண்கள் உறுதியிட்டு கூறமுடியாது. நான் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் சொன்ன தொகை திருடப்படவில்லை என்றும் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி லோகநாதன் மற்றும் ராஜ்குமார் என்பவர்கள் யார் என்றால் எனது பக்கத்து தோட்டத்தை சேர்ந்தவர்கள்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.21 18:26:15 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 253 of 2024

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருத்தாசல மூர்த்தி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சென்னியப்பன் | வயது | : | |
| கிராமம் | : | ஊஞ்சப்பாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.01.2026.

(2 ஆம்எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 21.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பவல் லூம் மற்றும் விவசாய தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 வேணுகோபாலை எனக்கு தெரியும் நானும், வேணுகோபால் மற்றும் ராஜேந்திரன் ஆகிய மூவரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறோம். மேலும் அந்த காம்பவுண்டில் ஐஸ்கிரிம் மற்றும் அரிசி கடை நடத்தி வருகிறோம். வழக்கம் போல் ராஜேந்திரன் கடையை காலை 6.00 மணிக்கு திறந்து இரவு 10.00 மணிக்கு மூடிவிடுவோம். கடந்த 26.06.2023 ஆம் இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டி மறுநாள் காலை 6.00-7.00 மணியளவில் ராஜேந்திரன் கடையை வந்து பார்த்தப்போது எங்கள் ரியல் எஸ்டேட் அலுவலகத்தின் சட்டர் பூட்டை ஆசா பிளேட் மூலம் அறுத்து உள்ளே சென்று வேணுகோபால் வசூல் பன்னி வைத்திருந்த பணம் ரூ.42,000/- மற்றும் பத்திர ஆவணங்கள் மற்றும் ராஜேந்திரன் வைத்திருந்த பணம் ரூ.7000/- காணவில்லை. இது சம்மந்தமாக காலையில் ராஜேந்திரன் எனக்கு 7-8 மணியளவில் போன் மூலம் தகவல் சொன்னார்.

2) பின்னர் ராஜேந்திரன்,வேணுகோபால் மற்றும் நானும் உள்ளே சென்று பார்த்தப்போது மேலே சொன்ன பொருட்கள் காணவில்லை . இது சம்மந்தமாக வேணுகோபால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ஆம்எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) அரிசி கடை மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனம் மற்றும் அருண் ஐஸ்கீரிம் கடை யாருடைய பெயரில் இருந்தது என்றால் ராஜேந்திரன் பெயரில் இருந்தது. அதற்கான ஆவணங்கள் எதுவும் காவல் நிலையத்தில் கொடுத்தோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதை தவிற வேறு தொழில் செய்து வருகிறோம் என்றால் ஆம். மேலும் அரசியலில் இருக்கேன் என்றால் சரிதான். 26.06.2023 அன்று இரவு யார் யார் கடையை பூட்டிவிட்டு சென்றோம் என்றால் வேணுகோபால் மற்றும் ராஜேந்திரன் இருவரும் பூட்டி சென்றார்கள். எத்தனை மணியளவில் பூட்டினார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. கடையில் எத்தனை ஊழியர்கள் இருந்தார்கள் என்றால் பணியாளர்கள் ஒருவரும் இல்லை. திருட்டுபோனதாக சொல்லப்படும் சமயத்தில் கடையில் கேமரா இல்லை என்றால் சரிதான்.

2)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடையில் அருகாமையில் கேமரா இருந்ததா என்றால் இல்லை பெட்ரோல் பங்கில் கேமரா இருந்தது. திருட்டு போன தகவல் எனக்கு எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் 7.00- 8.00 மணிக்கு . நான் வந்த பார்த்தப்போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் பழனிச்சாமி மற்றும் இரண்டு நபர்கள் இருந்தார்கள் அவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது. போலீசாருக்கு எப்போதுதகல் சொன்னோம் என்றால் ½ மணி நேரத்தில் தகவல் சொன்னோம் . போலீசார் அடுத்த நாள் காலை 9.00 மணிக்கு வந்தார்கள். அப்போதே கைரேகை விவரங்களை போலீசார் சேகரித்தார்கள்

என்றால் சரிதான். ஆக்ஷா பிளேடு சம்பவ இடத்தில் இருந்தா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) புகார் கொடுக்க யார் காவல் நிலையம் சென்றார் என்றால் வேணுகோபால் சென்றார். எத்தனை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் நான்கு ஐந்து காவலர்கள் காரில் வந்தார்கள். அதன் பின்னிட்டுதான் புகார் கொடுக்க சென்றோம் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு போலீசார் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைகள் திருடுபோனது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தொகையை எங்கு வைத்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமாஎன்றால் மர டேபிள் ட்ராவில் வைத்திருந்தாக சொன்னார்கள்.

4) சட்டருக்கு அடுத்தாக கண்ணாடி கேபின் உள்ளது என்றால் சரிதான். சட்டர் கேபினை பூட்டிவிட்டு சென்றோம் என்றால் சரிதான். அருகில் இருந்த கடைகள் உடைக்கப்பட்டிருந்ததா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் சொன்ன தொகை திருடப்படவில்லை என்றும் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி லோகநாதன் மற்றும் ராஜ்குமார் என்பவர்கள் யார் என்றால் எனது நண்பர்கள்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.01.21 18:26:23 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 253 of 2024

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பழனிச்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | வேலுச்சாமி | வயது | : | |
| கிராமம் | : | காளிவேலம்பட்டி | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.01.2026.

(2 ஆம்எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 21.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு செய்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியவரை தெரியும். அவர்கள் பல்லடம் - பூமாலூர் ரோட்டில் ரியல் எஸ்டேட் அலுவலகம் , அரிசி கடை மற்றும் ரியல் எஸ்டேட் அலுவலகம் ைவ்தது தொழில்செய்து வருகிறார்கள். கடந்த 26.06.2023 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டி சென்றார் மறுநாள் காலை 6.00 ராஜேந்திரன் ரியல் எஸ்டேன் கடையை திறந்தபோது கடையின் பூட்டி உடைக்கப்பட்டும் சட்டர் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாக சொன்னார். மேற்படி விவரத்தை பூட்டை உடைத்து கடையில் இருந்த பணம் ரூ.42000 மற்றும் டாக்குமென்டுகள் காணாமல் போயிருப்பதாக சொன்னார். இது சம்மந்தமாக வேணுகோபால் போலீசில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ஆம்எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) நான் தகவல்கைித்து எத்தனை மணிக்கு சென்றேன் எனறால் 7.00 மணிக்கு சென்றேன். நான் சென்றபோது யார் யார் அங்கிருந்தார்கள் என்றால் அ.சா.1 மற்றும் 2 ராஜேந்திரன் மற்றும் லோகநாதன் இருந்தார்கள். நாங்கள் சென்ற பிறகுதான் சட்டரை தூக்கி பார்த்தார்கள் என்றால் நாங்கள் செல்வதற்கு முன்பே திறந்திருந்தார்கள். போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியாது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.01.21 18:26:31 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 253 of 2024

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.லோகநாதன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | வயது | : | |
| கிராமம் | : | காளிவேலம்பட்டி | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.01.2026.

(2 ஆம்எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 21.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு செய்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 26.06.2023 ஆம் தேதி பல்லடம் - பூமலூர் ரோட்டில் கருடா ரியல் எஸ்டேட் அலுவலகத்தில் திருட்டு போயிருப்பதாக தகவல் தெரிந்துக்கொண்டேன். அது சம்மந்தமாக 12.30 மணியளவில் போலீசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அதில் நான் மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆகும். இது சம்மந்தமாக போலீசார்என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ஆம்எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1)போலீசார் என்னை விசாரித்தபோது திருடு போனதாக சொல்லப்படும் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சம்பவ சமயத்தில் விவசாயம் தான் பார்த்துவந்தேன் என்றால் அவ்போது வேலைக்கு சென்று

வந்தேன். நான் சொன்ன விவரம் தவறு என்றால் சரியல்ல. திருடுபோன தகவலை யார் சொன்னார்கள் எப்போது சொன்னார்கள் என்றால் காலை 9.00 மணிக்கு மந்தராசல மூர்த்தி மற்றும் ராஜேந்திரன் சொன்னார்கள். நான் எத்தனை மணியளவில் சென்று பார்த்தேன் என்றால் 11.00 மணியளவில். நான் சென்று பார்த்தப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் சாட்சி பழனிச்சாமி மற்றும் ராஜேந்திரன் மற்றும் மந்திராசலமூர்த்தி இருந்தார்கள் . போலீசார் வரும்போது மந்திராசல மூர்த்தி இருந்தாரா என்றால் இருந்தார்.

2)நாங்கள் எத்தனை தாளில் கையொப்பம் செய்தோம் என்றால் ஒரு தாளில் செய்தோம். நான் கையொப்பம் செய்த தாளில் திருட்டு எப்படி போயிருந்தது என்ற விவரம் எழுதியிருந்தது என்றால் சரியல்ல. அதில் மற்ற விவரங்கள் இருந்தது பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியும். போலீசார் வந்து பார்க்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் மந்திராசல மூர்த்தி, பழனிச்சாமி, ஆறுமுகம் மற்றும் நான் இருந்தேன் மற்றும் என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த நபர் இருந்தார். என்னுடன் சாட்சி கையொப்பம் செய்தவரின் பெயர் மற்றும் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எத்தனை போலீசார் வந்திருந்தார்கள் என்றால் 4 போலீசார் வந்தார்கள் அவர்களுடன் பெண் ஆய்வாளர் வந்திருந்தார். நான் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் எந்த சாட்சி கையொப்பம் சம்பவ இடத்தில் போடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு சம்பவ இடத்தில் வைத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.21 18:26:40 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.